ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2422/39 - 2025 පෙබරවාරි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.02.06
2422/39 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பி 6/2017

**2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டம்**

2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 7 இன் (ஓ) மற்றும் (து) என்னும் பந்திகளுடனும் பிரிவு 9 உடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 39 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**பிமல் நிரோஷன் ரத்நாயக்க,**
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள்,
துறைமுகங்கள் மற்றும் சிவில்
விமான சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
2025 ஆம் ஆண்டு பெப்புருவரி 03.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2025 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, குடியியல் வான்செலவு (வான்வழிச் செலவு வசதிகள் மற்றும் அதனைச் சார்ந்துள்ள காணிகளின் வழங்குகைக்கான விதிப்பனவுகளை விதித்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

1A - PG 7022 — 374 (2025/02)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2. இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் நியதிகளின்படி அதிகாரசபைக்கு கைமாற்றப்படுகின்றவையும், உரித்தாக்கப்படுகின்றவையும் இதற்கான அட்டவணையின் (II) ஆம் நிரல் இல் குறித்துரைக்கப்பட்டவாறானவையுமான இதற்கான வான்வழிச் செலவு வசதிகள் மற்றும் அவற்றுடன் இணைந்துள்ள காணிகள் அவ்வட்டவணையின் நிரல் (I) இல் குறித்துரைக்கப்பட்ட எந்த சேவை வழங்குநருக்கு மேற்கூறப்பட்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி கிடைக்கக்கூடியதாகவுள்ளதோ அந்த சேவை வழங்குநர், அத்தகைய வான்வழிச் செலவு வசதிகளையும் அவற்றோடு இணைந்துள்ள காணிகளையும் பயன்படுத்துவதற்காக நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட விதிப்பனவை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு செலுத்துதல் வேண்டும்.

3. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக:-

"அதிகாரசபை" என்பது, 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை எனப் பொருள்படும்;

"வான்வழிச் செலவு வசதிகளும் மற்றும் அதனுடன் இணைந்துள்ள காணியும்" என்பது, 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான வான்வழிச் செலவு வசதிகளும் மற்றும் அதனுடன் இணைந்துள்ள காணியும் எனப் பொருள்படும்.

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்

"சேவை வழங்குநர்" என்பது, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் பிரிவு 6(3) இனால் நியமிக்கப்பட்ட நியதிச்சட்ட முறையான சேவை வழங்குநர் எனப் பொருள்படும்.

**அட்டவணை**

| *நிரல் (I)* | *நிரல் (II)* | *நிரல் (III)* |
|---|---|---|
| *சேவை வழங்குநர்* | *வான்வழிச் செலவு வசதிகள் மற்றும் அவற்றுடன் இணைந்துள்ள காணி* | *விதிப்பனவுகள்* |
| விமான நிலையங்கள் மற்றும் விமான போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) (பிறைவேட்) லிமிட்டெட் | 1. கண்டாவள வீதி, இரத்மலானையிலுள்ள விமான போக்குவரத்து பயிற்சி நிலையம், அதன் மீதுள்ள கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் மற்றும் அவற்றுடன் இணைந்துள்ள காணி.<br>2. அத்திடிய, இரத்மலானையிலுள்ள வான்வழிச் செலவு தொடர்பாடல் கடத்துகை நிலையம், அதன் மீதுள்ள கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் அத்துடன் அவற்றுடன் இணைந்துள்ள காணி.<br>3. மாதம்பெல்ல, கம்பஹாவில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கான வானொலி கடற்செலவு உதவி அதன்மீதான கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் அத்துடன் அவற்றுடன் இணைந்துள்ள காணி.<br>4. கம்பஹாவிலுள்ள கடுன்கொட, பமுனுகமவில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள ஓடுபாதைக்கான வானொலி கடற்செலவு உதவி அவற்றின் மீதான கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் அத்துடன் அவற்றுடன் இணைந்துள்ள காணி. | ஒவ்வொரு வான்வழிச செலவு வசதியினதும் அதனுடன் இணைந்துள்ள காணியின் ஹெக்டேயர் ஒன்றுக்கு ஐம்பதாயிரம் (ரூபா 50,000.00) வருடாந்த விதிப்பனவு ஒவ்வோர் ஐந்தாண்டு காலப்பகுதியிலும் அத்தகைய விதிப்பனவின் பத்து சதவீதத்தை (10%) அதிகரிப்பதன் மூலம் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். |

| *நிரல் (I)* | *நிரல் (II)* | *நிரல் (III)* |
|---|---|---|
| *சேவை வழங்குநர்* | *வான்வழிச் செலவு வசதிகள் மற்றும் அவற்றுடன் இணைந்துள்ள காணி* | *விதிப்பனவுகள்* |
| | 5. பீதறுதாலகால மலையில் அமைந்துள்ள ராடர் நிலையம், அவற்றின் மீதான கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் அத்துடன் அவற்றுடன் இணைந்துள்ள காணி.<br>6. நுவரெலியா மாவட்டத்தின் பீதுறுதாலகாலவிலுள்ள காணி அதன் மீது அல்லது அவற்றுடன் இணைந்துள்ள எவையேனும் கட்டமைப்புகள் உப்பட வான்செலவு பணியாட் தொகுதியினருக்கான விடுமுறை பங்களாக்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள அக்காணி. | |

EOG 02 - 0056

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.